தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுக் கவிதைப்போட்டி 2023

**“நிலமும் மொழியும் கலையும் பண்பாடும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்”**
-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்-

ஈழத்தமிழினம் தன்னிறைவு கொண்ட தாயகத்தையும், தொன்மையான மொழியையும், தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்கள், கலை, பண்பாடுகளையும் கொண்டிருந்த வையகத்தின் மூத்த இனம். இவற்றை எம்மிடமிருந்து பறித்துத் தமிழினத்தை அழிக்கின்ற கொடுமையான போரை எதிர்த்துப் போராட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம். அத்தகைய விடுதலைப் போரிலே தங்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகங்களை என்றென்றும் போற்ற வேண்டியது தமிழர்களாகிய எமது கடமையாகும்.

சுவிஸ் மண்ணில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களதும் இளையோரினதும் சிறார்களதும் கவிபாடும் ஆற்றலை வளர்த்தெடுப்பதற்காகத் தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுக் கவிதைப்போட்டி நடாத்தப்பெறுகின்றது. **இப்போட்டியில் வயதுப்பிரிவுகளின் அடிப்படையில் விரும்பிய அனைவரும் பங்குபற்றலாம்.**

போட்டியாளர்கள் கீழ்த்தரப்பட்டவாறு வயதுப்பிரிவுகளுக்கமைய தரப்பெற்ற நேரத்திற்குள், தரப்பெற்ற வரிகளின் எண்ணிக்கைக்குக் குறையாமலும் கூடாமலும், தரப்பெற்ற தாள்களில் கவிதைகளினை எழுதி, பின் பாடிக்காண்பித்தல் வேண்டும். **எழுதுவதற்கு 60 புள்ளிகளும்**, அதனைப் **பாடிக்காண்பிப்பதற்கு 40 புள்ளிகளும்** வழங்கப்பெறும்.

| **பிரிவுகள்** | **வயதெல்லை** | **நேரம்** | **வரிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. கீழ்ப்பிரிவு | 7 வயது முதல் 10 வயதுவரை<br>(01.01.2013 - 31.12.2016 வரையில் பிறந்தோர்) | 40 நிமிடம் | ஆகக்குறைந்தது 4 வரிகள்<br>ஆகக்கூடியது 8 வரிகள் |
| 2. மத்திய பிரிவு | 11 வயது முதல் 15 வயதுவரை<br>(01.01.2008 - 31.12.2012 வரையில் பிறந்தோர்) | 60 நிமிடம் | ஆகக்குறைந்தது 8 வரிகள்<br>ஆகக்கூடியது 12 வரிகள் |
| 3. மேற்பிரிவு | 16 வயது முதல் 20 வயதுவரை<br>(01.01.2003 - 31.12.2007 வரையில் பிறந்தோர்) | 60 நிமிடம் | ஆகக்குறைந்தது 12 வரிகள்<br>ஆகக்கூடியது 16 வரிகள் |
| 4. அதிமேற்பிரிவு | 21 வயதும் அதற்கு மேலும்<br>(31.12.2002 ஆம் நாளும் அதற்கு முன்பும் பிறந்தோர்) | 60 நிமிடம் | ஆகக்குறைந்தது 16 வரிகள்<br>ஆகக்கூடியது 24 வரிகள் |

### கவிதைத் தலைப்புகளுக்கான விடயப்பரப்புகள்:

**கீழ்ப்பிரிவு:** தமிழ்மொழி, தமிழீழத் தேசியத்தலைவர்

**மத்தியபிரிவு:** தமிழீழத் தேசியத்தலைவர், தமிழீழத் தேசியமாவீரர்

**மேற்பிரிவு:** தமிழீழத் தேசியத்தலைவர், தமிழீழத் தேசியக்கொடி, தமிழீழத் தாயகம்

**அதிமேற்பிரிவு:** தமிழீழத் தேசியத்தலைவர், தமிழீழத் தேசியமாவீரர், தமிழீழத் தாயகம், தமிழீழத் தேசியச் சின்னங்கள்

ஒவ்வொரு வயதுப்பிரிவினருக்கும் தரப்பெற்ற விடயப்பரப்புகளினுள்ளிருந்து நான்கு தலைப்புகள் தெரிவுசெய்யப்பெற்று, போட்டி ஆரம்பிக்கும்போது வழங்கப்பெறும். போட்டியாளர்கள் வழங்கப்பெறும் தலைப்புகளுள் தாம் விரும்பிய ஒரு தலைப்பினைத் தெரிவுசெய்து கவிதை எழுதுதல் வேண்டும்.

கீழ்ப்பிரிவில் பங்குபற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, அவ் வயதுப்பிரிவுக்கு மட்டும் முற்கூட்டியே நான்கு தலைப்புகள் வழங்கப்பெறுகின்றன. இத்தலைப்புகளுள் விரும்பிய ஒன்றைத் தெரிவுசெய்து முன்னாயத்தம் செய்து போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும் தாளில் அதனை எழுதி, சமர்ப்பிக்க வேண்டும்.

கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கான தலைப்புகள் வருமாறு:

- தமிழே! எங்கள் தாய்மொழியே!
- தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம்....
- வழிகாட்டும் தலைவர் மாமா....
- தமிழினம் காக்கும் தலைவர் மாமா....

அனைத்துப் பிரிவினருக்குமான போட்டிகளும் சுவிஸ் நாடுதழுவிய வகையில் **05.11.2023 ஞாயிற்றுக்கிழமை சூரிச் மாநகரில்** நடைபெறும். பங்குபற்றும் அனைவருக்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் நினைவுப்பரிசும் வழங்கப்பெறுவதுடன், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் **27.11.2023 திங்கட்கிழமை** பாசல் நகரில் நடைபெறும் தமிழீழத் தேசிய மாவீரர்நாளில் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தினைத் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் www.trfswiss.com இணையத்தளத்திலும் தமிழர் நினைவேந்தல் அகவத்தின் முகநூலிலும் தமிழ்ப்பள்ளி முதல்வர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவிதைப்போட்டி விண்ணப்ப முடிவு நாள் : 25.10.2023 புதன்கிழமை**

மாணவர்கள் முழுமைப்படுத்தப்பெற்ற விண்ணப்பப் படிவத்தினையும் போட்டிக்கட்டணமான 10 சுவிஸ் பிராங்குகளினையும் வகுப்பாசிரியர் அல்லது பள்ளிமுதல்வரிடம் வழங்குதல் வேண்டும். ஏனையோர் கீழ்வரும் முகவரிக்கு நேரடியாக அனுப்பிவைக்கவும். இக்கவிதைப்போட்டியில் முதன்முறையாகப் பங்குபற்றுபவர்கள் தங்கள் வதிவிட அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பெறவேண்டிய முகவரி:**

தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுக் கவிதைப்போட்டி
Tamilar Remembrance Foundation – Swiss
Postfach 439
4528 Zuchwil.

**தபாற்கணக்கு எண்:** CH 07 0900 0000 6003 4553 3

**போட்டிக் கட்டணம்:** 10 CHF, **பிந்தியவிண்ணப்பக் கட்டணம்:** 20 CHF

**தொடர்புகளுக்கு :** 079 398 28 19, 076 426 27 80